உ

ஓம் குஹாயநம :

திருப்புகழமிர்தம்.

ஒரு சிறந்த மாத வெளியீடு.

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

(மலர் 2.)

ஈஸ்வர ௵ சிததிரை ௴ முதல் பங்குனி ௴ வரையில்.

1937 ௵ ஏப்ரல் ௴ முதல் **1938** ௵ மார்ச்சு ௴ வரையில்

திருப்புகழ்த் தொண்டன்,

கிருபானந்தவாரி.

"திருப்புகழமிர்தம்" ஆபீஸ்,
108, சாமிநாய்க்கன் தெருவு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

1938

இதன் விலை ரூ. 1-8-0. தபாற்கூலி வேறு.

திருப்புகழமிர்தம்

பொருளடக்கம்

விஷயங்கள்.		பக்கங்கள்.
திருப்புகழ் (பதவுரை, பொழிப்புரை, விரிவுரை கருத்துரையுடன்)		
இரண்டாவது படைவீடு.		
திருச்செந்தூர்—சொரதி சரிய	...	1
,, —முந்து தமிழ்	...	33
,, விறலமாறன்	...	65
,, அந்தகன்	...	97
,, தோலொடு	...	129
,, சங்கைதான்	...	161
,, அங்கைமென்	..	166
,, அமுதுததி	...	193
,, கொடியனைய	...	225
,, அகிச்சகார்	...	257
,, கொம்பனையார்	...	289
,, உருக்கமபேசிய	...	321
,, அறிவழிய	...	353

புராண வரலாறுகள்.

முந்துதமிழ்மாலை		
(1) யாகரக்ஷக வரலாறு	...	41
விறன்மாறன்:		
(1) அறுமுகச்சிவனாரை ஐம்முகச்சிவனார் வழிபட்ட வரலாறு	...	69
(2) மாவெறிந்த வரலாறு	...	71
சங்கைதான்:		
(1) கங்கையைத்தரித்த வரலாறு	...	163
அறிவழிய:		
(1) அகத்தியனார் பெருமை	...	358
ஸ்ரீஸுப்ரஹ்மண்ய புஜங்கஸ்தோத்திரம்	...	9, 46, 74, 107, 139, 171, 203, 236, 265, 297, 327, 361

விஷயங்கள்.			பக்கங்கள்.
கந்தர் திருவிளையாடல்		...	13
,,	— பார்வதி ஜனனம்	...	15, 50, 77
,,	காமதகனம்	...	79, 111
,,	மோன நீங்குதல்	...	143
,,	அம்பிகையின் தவநிலையறிதல்	...	145
,,	பார்வதியம்மையார் திருமணம்	...	174
,,	திருவவதாரம்	...	206, 239
,,	நவவீரருற்பவம்	...	241, 268, 300
,,	முருகக்கடவுள் விஸ்வரூபம்	...	329
,,	முருகப்பெருமான் அஜாரூடரான விளையாடல்	...	363
கற்பு (சுகன்னி)	...	...	18
,, (கௌசிகன்)	...	...	54
,, (சீதை)	...	...	150, 181
,, (ஆதிரை)	...	...	211
,, (சாவித்திரி)	...	...	244, 274, 306, 334
,, மங்கலவதி	...	...	368
பிரமசரியம்	...	...	23
கிரகஸ்தம்	...	...	117, 156
வானப்பிரஸ்தம்	...	...	339
பஞ்சாக்ஷரம்	...	...	28
திருப்புகழமிர்தம் சிறப்புரை		...	32
குரு சிஷ்யலக்ஷணம்	...	...	59
,, (குருலக்ஷணம்)	...	...	60
,, (குருவின் அவசியம்)	...	...	92
,, (சிஷ்ய லக்ஷணம்)	...	...	160, 191, 222, 253, 285
திருவிளக்குப்பூஜை	...	...	63
கதிர்காமம் யாத்திரை	..	..	84
புனிதவதியின் நற்போதனை	...	...	121
என் பிரார்த்தனை	...	...	127
தொண்டர்தம் பெருமை	...	...	187
மோனமென்பது ஞானவரம்பு	...	...	218
ஜீவகாருண்ய ஒழுக்கம்	...	...	250

விஷயங்கள்.	பக்கங்கள்.
வீட்டுநெறி ...	281
நாம ஏனபிறநதோம	312
நானகு ரசதினங்கள்	341
தாமம்	346
இரவல	351, 383
மகன் தாய்தநதைககாற்று முதவி ...	374
,, (தாய்சந்தை செயயும நன்றி) ...	374
,, (துற்புதிரன் இயல்பு) ...	377
,, (மகன் ஆற்று முதவி) ...	379

	ரூ.	அ.	பை.
திருப்புகழமிர்தம் 1-வது மலர் பைண்டு ...	1	8	0
,, 2-வது மலர் பைண்டு ...	1	8	0
(தபாற்கூலி வேறு)			
திருப்புகழ் திரட்டு (திருப்புகழ், கநதரனுபூதி, கந்த ரலஙகாரம், சேவல் வகுப்பு, வேல விருத்தம, மயில் விருத்தம் அடங்கியுளது) ...	0	12	0
(தபாற்கூலி வேறு)			

மானேஜர், "திருப்புகழமிாதம்" ஆபீஸ்,
108, சாமி நாய்க்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை.

உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்.

(All Rights Reserved)

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர். 2 | ஈசுவர௵ சித்திரைமீ 1உ | இதழ் 1
Vol. 2 | ஏப்ரல்—1937 | No. 1

திருப்புகழ்.

திருச்செந்தூர்

(13) தொந்திசரிய மயிரே வெளிற நிரை
தந்தமசைய முதுகே வளைய இதழ்
தொங்க வொருகை தடிமேல் வரமகளிர்
நகையாட

தொண்டுகிழவ னிவனு ரெனஇருமல்
கிண்கிணெனமு னுரையே குழறவிழி
துஞ்சு குருடு படவே செவிடுபடு
செவியாகி

வந்தபிணியு மதிலே மிடையு மொரு
பண்டி தனுமெ யுறுவே தனையுமிள
மைந்த ருடைமை கடனே தெனமுடுகு
துயர்மேவி

மங்கை யழுது விழவே யமபடர்கள்
நின்று சருவ மலமே யொழுகவுயிர்
மங்கு பொழுது கடிதே மயிலின்மிசை
வரவேணு

எந்தை வருக ரகுநாயக வருக
மைந்த வருக மகனே யினிவருக
என்கண் வருக எனதா ருயிர்வருக
அபிராம

இங்கு வருக அரசே வருகமுலை
யுண்க வருக மலர்சூ டிடவருக
என்று பரிவி னொடுகோ சலைபுகல
வருமாயன்

சிந்தை மகிழு மருகா குறவரிள
வஞ்சி மருவு மழகா அமரர்சிறை
சிந்த அசுரர் கிளைவே ரொடுமடிய
அடுதீரா !

திங்களரவு நதிசூ டிய பரமர்
தந்தகுமர அலையே கரை பொருத
செந்திநகரி லினிதே மருவி வளர்
பெருமாளே !

பதவுரை.

எந்தை வருக - என் அப்பனே வா !, ரகுநாயக வருக - ரகு குலத்திற்கு நாயகனே வா !, மைந்த வருக - வலியுடையவனே வா!, மகனே இனி வருக - என் புதல்வனே தாமதியாது இனி வருவாய், என் கண் வருக - எனது கண்ணே வா !, எனது ஆர்உயிர் வருக - எனது அருமையான உயிருக்கு நிகரானவனே வா !, அபிராம இங்கு வருக - அழகிற் சிறந்தவனே இவ்விடம் வா !, அரசே வருக - இராஜாவே வா !, முலை உண்க வருக - பால் உண்ணவா !, மலர் சூடிட வருக - மலர்களை சூட்டிக்கொள்ள வா !, என்று பரிவினொடு கோசலை புகல - என்று அன்புடன் கௌசலாதேவி சொல்லி அழைக்குமாறு, வரும மாயன் - இராமபிரானாக அவதரித்து வந்த மாயா சொரூபமாகிய நாராயணமூர்த்தி, சிந்தை மகிழும் மருகா - உள்ளங் களிக்கும் படியான மருமகரே !, குறவர் இள - குறவர் குலத்தில் தோன்றிய வரும் இளமை யுடையவரும், வஞ்சி மருவும் அழகா - வஞ்சிக்கொடி போன்ற இடை யுடையவருமாகிய வள்ளிநாயகியார் அணைகின்ற அழகிற் சிறந்தவரே !, அமரர் சிறை - தேவர்களது சிறைச்சாலைத் [illegible]மானது, சிந்த - நீங்குமாறு, அசுரர் கிளை - இராக்கதர்களுடைய [illegible]வதும், வேரொடு மடிய - வேருடன் (அடியோடு) அழிந்து [illegible]வடுதீரா - போர் [illegible]ந்து கொன்ற தீரரே !. திங்கள் -

சந்திரனையும், அரவு - பாம்பையும், நதி - கங்கையையும், சூடிய - சடா பாரத்திற் றரித்துள்ள, பரமர் - எப்பொருட்கும் இறைவரும் பெரிய பொருளுமாகிய சிவபெருமான், தந்த குமர - பெற்றருளிய குமாரக் கடவுளே!, அலை (ஏ-அசை) கரை பொருத - கடலில் எழும் அலைகள் ஒழியாது கரையில் மோதப்பெற்ற, செந்தில் நகரில் - திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தூரில், இனிதே மருவி வளர் - இனிமையாகப் பொருந்தி வாழ்கின்ற, பெருமாளே - பெருமையிற் சிறந்தவரே!, தொந்தி சரிய - வயது முதிர்ச்சியால் வயிறு சரிந்து தொங்கவும், மயிர் (ஏ-அசை) வெளிற - கருத்திருந்த தலைமயிரானது (கொக்கைப் போல்) வெளுத்து நறைக்கவும், நிரை தந்தம் அசைய - வரிசையாக இருந்த பற்கள் அசையவும், முதுகு (ஏ-அசை) வளைய - நிமிர்ந்திருந்த முதுகானது (பல்லக்குபோல்) வளையவும், இதழ் தொங்க - உதடுகள் தொங்கவும், ஒரு கை தடிமேல் வர - (கூனுடன்) ஒரு கரம் தடியின் மேல் பொருந்தி வர (தடியூன்றி தளளாடி நடந்துவருகின்ற சமயத்தில்), மகளிர் - பெண்கள், நகையாடி - (கிழவனாகிய என்னை நோக்கி) ஏளனமாகச் சிரித்து, தொண்டு கிழவன் இவன் ஆரெனா - "பழைய கிழவனாகிய இவன் ஆர்? என்று பரிகசிக்கவும், இருமல் கிண்கிண் என - கிண்கிண் என்ற ஒலியுடன் இருமல் வரவும், முன் உரை (ஏ-அசை) குழற - முன்னர் திருத்தமாகப் பேசிக்கொண்டிருந்த சொற்கள் குழறவும், விழி துஞ்சு குருடுபட (ஏ-அசை) கண்கள் எக்காலத்தும் தூங்குவதுபோல் ஒளி குன்றி குருட்டுத்தன்மை யடையவும், செவிடு படு செவியாகி - காதுகள் செவிட்டுத்தன்மை யடையவும், வந்த பிணியும் - உடலுக்கு வந்த நோயும், அதிலே மிடையும் - அந்த நோயை அகற்றுதற்பொருட்டு நெருங்கிய, ஒரு பண்டிதனும் - ஒரு வைத்தியனும், மெய் உறு வேதனையும் - சரீரத்திற்கு வந்த நோயா லாகிய துன்பமும் துன்புறுத்த, இளமைந்தர் உடைமை கடன் ஏது என - இளம்பருவத்தையுடைய மக்கள் சொத்து எவ்வளவு இருக்கிறது என்றும் கடன் எவ்வளவு இருக்கிறது என்று கேழ்க்கவும், முடுகு துயர் மேவி - இதனாலாகிய துன்பங்களை நான் அடையவும், மங்கை அழுது விழவே - என் பத்தினி ஓவென்று கதறி அழவும், யமபடர்கள் நின்று சருவ - யமதூதர்கள் என் உயிரைப்பற்றுமாறு வந்து நெருங்கி நிற்கவும், மலம் (ஏ-அசை, ஒழுக - மலம தண்ணீர் போல் ஒழுகவும், உயிர் மங்கு பொழுது - அடியேனது உயிர் மங்குந் தன்மை யடையும்போது, கடிதே மயிலின் மிசை வரவேணும் - விரைவாக மயில்வாகனத்தின்மீது வந்தருள் புரியவேணும்.

பொழிப்புரை.

என் அப்பனேவா! இரகுகுலத்திற்கு நாயகனேவா! வலியுடையவனேவா! என்மகனே! இனிவருவாயாக, என்கண்ணேவா! எனது ஆருயிரேவா! அழகிற்சிறந்தவனே! இவ்விடம்வா, ராஜாவேவா! பால்குடிக்கும்பொருட்டு வா! மலரைச்சூடிக்கொள்ளுவதற்காக வா! என்று அன்புடன் கௌசலாதேவி அழைக்குமாறு மண்ணுலகில் அவதரித்துவந்த இராமபிரானும் மாயாசொரூபமாகிய மகாவிஷ்ணு உளளம் மகிழ்ச்சி யடையும் மருமகரே! குறவர்குலத்திற் பிறந்தவரும் இளமை யுடையவருமாகிய வள்ளியம்மையார் மருவுகின்ற கட்டழகுடையவரே! தேவர்களது சிறைவாசம் ஒழிய அசுரர்களது வமிசம் அடியோடு போர்புரிந்து அழித்த தீரரே! சந்திரனையும் சர்ப்பத்தையும் நதியையும் சடையிற்சூடிக்கொண்டுள்ள சிவபெருமான் பெற்ற குமாரமூர்த்தியே! கடலின் அலை கரையில் மோதுகின்ற திருச்செந்தூர் என்னும் புனித தலத்தில் வாழ்கின்ற பெருமையிற் சிறந்தவரே! முதுமையடைந்ததனால் தொங்கி சரியவும், கருமைநிறம் பொருந்திய மயிர்கள் வெளுத்து நரையடையவும், வரிசையாகிய பற்கள் அசையவும், முதுகு வளையவும், உதடுகள் தொங்கவும், ஊன்று கோலின்மீது ஒருகரம் பொருந்துமாறு தள்ளாடி நடந்துவருங்காலையில் பெண்கள் "பழய கிழவனாகிய இவன்யார்?" என்று எள்ளிநகையாடவும், கிண் கிண் என்ற ஒலியுடன் இருமல் வரவும், அழுத்தமாகவும் திருத்தமாகவும் முரண்பேசிக்கொண்டிருந்த வார்த்தைகள் குழறவும், கண்கள் எப்போதும் தூங்குவதுபோல் ஒளிகுன்றி குருட்டுத்தன்மையடையவும், செவிகள் செவிட்டுத்தன்மை யடையவும், உடலுக்குவந்த நோயும், அதனை நீக்குதற்கென நெருங்கிவந்த வைத்தியனும், சரீரத்திற்கு உற்ற பிணியின்துன்பமும் (ஒருங்கேவருத்த), இளம் பிள்ளைகள் சொத்து (ஆஸ்தி) எவ்வளவு இருக்கிறது? கடன் எவ்வளவு இருக்கிறது? என்று கேழ்க்கவும், துன்பமானது மிகவும், விரைந்து வரவும், என்பத்தினி ஓ வென்று கதறிஅழவும், யமதூதர்கள் என் உயிரைப் பற்றுமாறு வந்து நெருங்கி நிற்கவும், மலம் ஒழுகவும் ஆகிய மரணவஸ்தையடைந்து உயிர்மங்குகின்ற காலத்தில் தேவரீர் மயில்வாகனத்தின்மீது விரைவாகவந்து அடியேனைக் காத்தருளவேண்டும்.

விரிவுரை.

தோந்திசரிய :—

வயது முதிர்ந்தகாலத்தில் ஆலிலைபோலிருந்த வயிறு பெருத்து சரிந்துவிடும்.

மயிரே வெளிற :—

கருமைநிறத்துடனிருந்த மயிர்கள் கொக்கு போல் நரைத்து வெளுத்துவிடும். "தலைமயிர் கொக்குக் கொக்க நரைத்து" என்ற திருவாக்கையும் உன்னுக

நிறைதந்தம் அசைய :—

முத்தைப் போல் வரிசையாயிருந்த பற்கள் அசைந்து உதிரும்.

"வயது சென்றது வாய்ப்பல்லுதிர்ந்தது"

—திருப்புகழ்.

பற்கள் உதிர்ந்த வுடனே சொற்கள் கெட்டுவிடுமாதலால் இறைவனை வாயார வாழ்த்துதற்கு இயலாது போம். ஆதலால் பற்கள் விடுமின் இறைவனைத் துதித்தல் வேண்டும். பற்கள் உதிர்ந்தபின் மந்திரம் ஜெபிப்பார்க்கு சித்தியுருதென்னும் மந்திரசாத்திரத்தையும் உய்த்துணர்க.

முதுகே வளைய —

"நிமிர்ந்த முதுகுங் குனிந்து" என்றபடி முதுகு பல்லக்கு போல் வளைந்துவிடும். அங்ஙனம் கூன் வளைந்தபின் இறைவன் திருவடியை மனத்தின்கண் நினைத்து தியான சமாதி செய்தற் கியலாது. முதுகுதண்டிலுள்ள சுழிமுனை என்னும் வெள்ளை நரம்பிலுள்ள தாமரைத்தண்டின் சிறு துவாரம்போன்ற நுண்ணிய வழியில் பிராண வாயுவை கபாலம் வரைக்கும் ஏற்றி சிவயோகசாதனம் முதுகு வளைந்துவிட்டபின் செய்யமுடியாது எனவே இடுப்பும் முதுகும் சிரமும் நேரேநிறுத்தி சித்திரப்பதுமைபோல் இருந்து தியானித்தல்வேண்டும். ஆதலால் முதுகுவளையாமுன் சிவயோகத்தை முயலல்வேண்டும்.

மகளிர நகையாடி :—

முதுமைப் பருவம் வந்த காலத்தில் பெண்களும் இளைஞர்களும் பரிகசித்து நகையாடுவர்.

"வருத்தமுந்தர தாய்மனை யாள்மக
வெறுத்தி டங்கிளை யோருடன் யாவரும்
வசைக் குறுஞ்சொலி னுல்மிக வேதினம் நகையாட"
—(மனததிரைந்) திருப்புகழ்.

விழிதுஞ்சு குருடுபடவே :—

கண்கள முதுமையில் ஒளிகுன்றி குருடுபடும். அங்ஙனம் கண்ணொளி யிழந்தபின் இறைவனது திவ்யமங்கள திருமேனியின் பொலிவைக்கண்டு "ஐந்துபோறிவுங் கண்களே கொள்ள" என்ற பேரானந்தத்தை யடையமுடியாது. ஆதலால் கண்கள் ஒளியுடன் விளங்கும்போதே கண்ணினாலாகிய பயனைப் பெறவேண்டும்.

செவிடுபடு செவியாகி :—

முதுமையில் கண்கள் குருடுபட்டதோடு காதுகளும் கேட்குந் தொழிலை இழந்துவிடும். அங்ஙனம் செவியடைந்தபின் இறைவனது அருட்பெருங் குணங்களைக் கேட்டு மகிழமுடியாது. செவிபடைத்ததன்பயன் இறைவனது சீர்கேட்டு சிந்தை மகிழ்தலே.

"செவ்வேளின் சீர்கேளாச் செவியென்ன செவியே"

வந்த பிணியும் :—

உதிரம் வற்றி உடல் தளர்ந்துவிடுவதால் முதுமையில் பல நோய்கள் வந்து துன்புறுத்தும்.

"சூலை சொறி யீளைவலி வாதமொடு நீரிழிவு
சோகைகள மாலைசுர மோடேபிணி தூறிருமல்
சூழலுற முலகசு மாலமென நாறியுடல்
அழிவேனோ"
—(வாலவய) திருப்புகழ்.

இள மைந்தர் உடைமை கடன் ஏதென :—

தொங்கி சரிந்தும், மயிர் நரைத்தும், பற்கள் கழன்றும், முதுகு வளைந்தும், இதழ் தொங்கியும், தடியூன்றியும், "இந்தக் கிழவன் யார்" என்று பெண்கள் பரிகசித்து நகையாடவும், இருமல் வரவும், மொழி குழறவும், குருடு படவும், செவிடு படவும், பற்பல நோய்கள் வரவும், வைத்தியன் வந்து பணங் கேழ்க்கவும், உடலில் வேதனையும் இவை முதலிய பல துன்பங்களால் துன்புற்று ஆவிபிரியுங்காலத்தில், இளம்

பிள்ளைகள் மாணுவஸ்தைப் படுவோனுடைய வருத்தத்தைக் கண்டு மனம் துடியாது, ஆஸ்தி எவ்வளவு ? கடன் எவ்வளவு ? எங்கெங்கு கொடுத்திருக்கிறீர் ! என்று கேட்டு துன்புறுத்துவார்கள். அவர்களது நன்மையைக் கருதுவார்களே யன்றி நம்முடைய நன்மையைக் கருதி ஆன்மா க்ஷேமமடைகின்ற வழியைத் தேடமாட்டார்கள்

யமபடர்கள் . . . . . மலமே ஒழுக:—

யமதூதர்கள் வந்து பாசக்கயிற்றால் உயிரைக்கட்டி யீர்க்கின்ற சமயத்தில் மலம் நீர்போலே நெகிழ்ந்து ஒழுகும்.

உயிர் மங்கு பொழுது கடிதே மயிலின் மிசை வரவேணும்:—

ஆவி மங்குகின்ற காலத்தில் முருகனுடைய தெரிசனம் உண்டாயின் இயமதூதர்கள் வெருவி ஓடுவார்கள். ஆதலால் விரைவாக மயில்வாகனத்தின்மிசை வந்து காப்பாற்றவேணும் என்றனர்.

எந்தை வருக . . . . . வருமாயன்:—

பகவானுகிய நாராயணர், அளவற்ற தவம்புரிந்த கௌசலாதேவி அன்புடன் பற்பல வகையாக அழைக்க அவளது திருவுதரத்தில் தோன்றி மகனுக வந்தனர்.

"மன்னுபுகழ் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே"

— திருமொழி.

சிந்தை மகிழ மருகா :—

ஷண்முகப் பெருமான் அளவற்ற கருணையும், முடிவில்லாத ஆற்றலும், ஞானமேயொரு திருமேனியும் உடையவராக இருந்து கார்த்திகைப் பெண்கள் அறுவர்களுக்கும் மகனுகிய அன்னார் பலவாறு அழைக்க அவர்களுக்கு அருள்புரிந்தமையால், நாராயணர் சிந்தை மகிழுகின்றார்.

குறவரிள வஞ்சி மருவும் அழகா:—

முருகப் பெருமான் வள்ளி நாயகியார் மருவுகின்ற அழகிற் சிறந்தவர் ; முருகப்பெருமானுடைய வடிவே அழகு ; அழகால் அவரின் மிக்காரும் ஒப்பாரும் இல்லை. "முழுதுமழகிய குமர"

—திருப்புகழ்.

அமரர்சிறை சிந்த . . . . அடுதீரா :—

தேவர்களை சூரபன்மன் சிறையிட்டு பல யுகங்களாகத் துன்புறுத்த, இனி நமக்கு உய்வில்லை என்று நிர்க்கதியாக இருந்த தேவர்களது சிறையைமீட்டு சூராதி அசுரர்களது குலத்தை அடியோடுஅழித்து முருகப்பெருமான் அறத்தை நிலைபெறச் செய்தனர். ஒருவராலும் வெல்லவொண்ணாத சூரன் முதலியோரை வென்றதனால் தீரன் என்றனர்.

தேவர்கள் என்பது :—சத்துவம் முதலிய நற்குணங்கள் ; அசுரர்கள் என்பது :—தாமசம் முதலிய தீயகுணங்கள் ; தீயகுணங்களை அழித்து நற்குணங்களை நிலைபெறச் செய்தனர் என்பது அதன் தத்துவம்.

திங்கள் அரவு . . . . தந்தகுமர :—

அபயமென்று வந்த சந்திரனையும் கொல்லவந்த அரவம் முதலியவைகளையுங் காப்பாற்றி சடாபாரத்தில் சூடிக்கொண்ட கருணை மூர்த்தியாகிய கண்ணுதற் கடவுளது மைந்தனை படியால், இயம பயம் நேருங்கால் மயில் மிசை வந்து காத்தருளல் வேண்டும் என்று விண்ணப்பம புரிகின்றனர்.

அலையே கரை . . . . பெருமாளே :—

அலைகள் வந்து தமதுதிருவடியில் ஓய்வுறுமாறு கடற்கரையில் முருகன் உறைகின்றனர். அலைகள் என்பது பலவகையான எண்ணங்கள். அவைகள் எம்பெருமானது திருவடியில் ஓயுமாறு செந்திலம்பதியில் வாழ்கின்றனர். செந்திலாண்டவனை நினைப்பார்க்கு துன்பங்கள் இல.

கருத்துரை.

மாயவனது மருகரே ! வள்ளிநாயகியின்மணாளரே ! அசுரரையழித்த அதிதீரரே ! சிவபெருமானது புதல்வரே ! செந்திலாண்டவரே! பற்பலதுன்புற்று ஆவிபிரியுங்கால் மயில்மிசைவந்து காப்பாற்ற வேண்டும்.

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

நூன்முகம்.

"செந்திலையுணர்ந்து உணர்ந்து உணர்வுற" என்று நம் அருணகிரிநாத சுவாமிகளால் புகழ்ந்தோதிய திருச்செந்தூர் என்னும் திருத்தலம் சுப்ரமண்ய க்ஷேத்திரங்களில் முதன்மை பெற்றது. கடற்கரையில் காண்போர் கண்ணுங்கருத்துங் கவருங் கவினுடையது இரண்டாவது படைவீடு. பாண்டியராஜனது மகளாகிய அங்கசுந்தரிக்கு சாபத்தால்வந்த குதிரைமுகம் மாறி அழகிய முகம்கிடைத்த வதனாரம்பதீர்த்தமுடையது. இயற்கையழகால் எக்காலத்தும் இன்பத்தை நல்குவது. 'பரமபதமாய செந்தில்' 'மகாபுநிதந்தங்குஞ் செந்தில்' என்ற திருவாக்குகளால் இப் புனிதக்ஷேத்திரத்தின் பெறுமை நன்கு வெளியாகின்றது. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஊமையாயிருந்து ஐந்தாவது ஆண்டில் இத்திருப்பதிக்குச் சென்றவுடன் அருள்பெற்று கந்தர் கலிவெண்பா எனனும் அரிய பிரபந்தத்தை ஓதிய மகிமையுடையது. வேண்டுவார் வேண்டிய வரங்களையெல்லாம் விரைவிலீந்து கலியுகவரதராகக் கந்தப்பெருமான் எழுந்தருளியுள்ள தெய்வீகமுடையது.

இத்தகைய திவ்ய க்ஷேத்திரத்தில் ஆதிசங்கர பகவத்பாதர் வந்தபோது எம்பெருமானை வழிபட்டு புஜங்க ஸ்தோத்திரம் என்னும் இனிய பிரபந்தத்தைத் திருவாய் மலர்ந்தருளினர். அந்நூலைப் பாராயணம் புரிவோர்க்கு இகபர சித்தியாம். இதன் பொருளையுணர்ந்து பாராயணம் புரிதலே சிறப்புடைத்தாதலால் இதன் பொருளை விளக்குதும். அன்பர்கள் கருத்துணர்ந்து தினந்தோறும் பூஜாகாலங்களில் அன்புடன் பாராயணம் புரிந்து "யார் வேண்டினுங் கேட்ட பொருளீயுந் தியாகாங்கசீல" னும் குமாரபரமேஸ்வரனது திருவருளைப் பெறுமாறு வேண்டுகின்றனம்.

நூல்.

सदा बाल रूपापि विघ्नाद्रि हन्त्री ।
महादन्ति वक्त्रापि पञ्चास्य मान्या ॥
विधीन्द्रादि मृग्या गणेशाभि धामे ।
विधत्तां श्रियंकापि कल्याणमूर्तिः ॥

ஸதா பால ரூபாபி விக்நாத்ரி ஹந்த்ரீ
மஹா தந்தி வக்த்ராபி பஞ்சாஸ்ய மான்யா ।
விதீந்த்ராதி ம்ருக்யா கணே சாபி தா மே
வித த்தாம் ஸ்ரியம் காபி கல்யாணமூர்த்தி: ॥ (1)

அவதாரிகை.

ஸ்ரீமத் சங்கராசார்ய சுவாமிகள் பக்தானுக் கிரகார்த்தம், ஜயந்தி புர (திருச்செந்தூர்) த்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருப்பவரும், பரமசிவனுக்குப் பிரணவார்த்தத்தை உபதேசித்த குருவாகையால் "ஸ்வாமிநாதன்" என்றும் ஆன்மாக்களின் ஹ்ருதய குகையில் சூட்சும ஜ்யோதிஸ்வரூபரா யிருப்பவராகையால் "குஹன்" என்றும் மற்றும் பற்பல காரணங்களைப்பற்றிப் பக்தர்களால் பல்லாயிரக் கணக்கான திருநாமங்களாற் றுதிக்கப்படாநின்றவருமான பரம்பொருளைத் துதிக்கத் தொடங்கி, அது இடையூறின்றி இனிது முடியும் பொருட்டு முதலில் விநாயக ஸ்துதி ரூபமாகிய மங்களத்தைச் செய்கின்றார்.

பதவுரை.

ஸதா - எக்காலத்தும்,
பால ரூபா அபி - குழந்தை வடிவ முடையதாயினும்.
விக் நாத்திரி ஹந்த்ரீ - இடையூறாகிய மலையைப் பிளக்கின்றதும்,
மஹா தந்தி வக்த்ரா அபி - பெரிய யானையின் முகத்தை யுடைத்தாயினும்,
பஞ்சாஸ்ய மாந்யா - சிங்கத்தால் அல்லது பரமசிவனால் வெகுமானிக்கத் தக்கதும்;
விதீந்த்ராதி ம்ருக்யா - பிரமன் இந்திரன் முதலிய தேவர்களால் தேடத்தக்கதும்,
கணே சாபிதா - கணேசன் என்று பெயருடையதுமான,
காபி கல்யாண மூர்த்தி - ஒப்பற்ற மங்கள மூர்த்தியான,
மே - எனக்கு,
ஸ்ரியம் - (மோக்ஷ) லக்ஷ்மியை,
விதத்தாம் - கொடுக்கட்டும்.

பொழிப்புரை.

எப்போதும் சிறுகுழந்தை வடிவமுடையதாயினும் தனது அன்பர்களுக்கு வரும் மலைபோன்ற இடையூறுகளைப் பிளக்கத்தக்க வலியுடையதும், பெரிய யானை முகத்தை யுடையதாயினும் சிங்க (பரமசிவ) த்தின் அன்பிற் குரியதும், பிரமன் இந்திரன் முதலிய இமையவரால் தேடப்படுவதுமான கணேசர் என்ற மங்கள மூர்த்தி எனக்கு † மோட்சத்தை அனுக்கிரகிக்கட்டும்.

குறிப்பு :— * பஞ்சாஸ்யன் ஐந்து முக முள்ளவன். இவை ஈசான தத்புருஷ, அகோர, வாமதேவ, சத்யோஜாத என்னும் ஐந்து முகங்கள் இருப்பதால் பரமசிவனுக்குப் பெயராம்.

பஞ்சாஸ்ய—விரிந்த முகத்தையுடையது என்று மற்றொரு பொருள். விரிந்த முகத்தையுடைய சிங்கத்திற்கும் பெயராம். எனவே பஞ்சாஸ்ய என்பது சிவபெருமானுக்கும் சிங்கத்திற்கும் பொருளாம.

† லக்ஷ்மி என்பது பொதுவாகச் செல்வத்தைக் குறிப்பதாயினும், சங்கராசார்ய சுவாமிகள் சர்வசங்க பரித்தியாகி யாகையால் மோக்ஷ லக்ஷ்மி யையே விரும்பி யிருக்கக்கூடும. அன்றியும் பிரமவிஷ்ணு வாதிகளாலும் வழிபடக்கூடிய விநாயக கடவுளிடம் அற்ப ஐஸ்வரியங்களை அபேக்ஷிப்பது அநுசிதமுமாம்.

न जानामि पद्यं न जानामि गद्यम् ।
न जानामि शब्दं न जानामि चार्थम् ॥
चिदेका षडास्या हृदि द्योतते मे ।
मुखान्निःसरन्ते गिरश्चापि चित्रम् ॥

நஜாநாமி பத்யம் நஜாநாமி கத்யம்
நஜாநாமி ஸப்தம் நஜாநாமி சார்த்தம் ।
சிதேகா ஷடாஸ்யா ஹ்ருத்த யோததேமே
முகாந்நி : ஸரந்தே கிரஸ்சாபி சித்ரம் ॥ (2)

அவதாரிகை.

இச் சுலோகத்தில் முற்றறிவும் முழுவல்லமையு முடைய குமாரக் கடவுளின் கருணையின்றி அற்ப அறிவுடைய ஜீவனால் எக்காரியமும் நடவாதென்னு முண்மையைக் கூறுகின்றார்.

பதவுரை.

பத்யம்	-	செய்யுளை.
நஜானாமி	-	அறியேன்.
கத்யம்	-	வசனத்தையும்.
நஜானாமி	-	அறியேன்
சப்தம்	-	சொல்லையும்
நஜானாமி	-	அறியேன்
அர்த்தம்	-	பொருளையும்
நஜானாமி	-	அறியேன்
கிந்து	-	ஆனால்
மே	-	எனது
ஹ்ருதி	-	உள்ளத்தில்
ஷடாஸ்யா	-	ஆறுமுகங்களையுடைய
ஏகாசித்	-	ஒரு சித்தானது; (சித்து:- ஞானஸ்வரூபம்)
த்யோததே	-	பிரகாசிக்கின்றன
முகாத்	-	முகத்தினின்றும்
கிர :சஅபி	-	வாக்குகளும் (சுலோகங்களும்)
நி:ஸரந்தே	-	வெளிப்படுகின்றன
சித்ரம்	-	ஆச்சரியம்

பொழிப்புரை.

நான் செய்யுள், வசனம், சொல், பொருள் இவை ஒன்றும் அறியேன். ஆனால் எனது உள்ளத்தில் ஆறுமுகங்களையுடைய ஒரு ஞானஸ்வரூபம் விளங்கிக்கொண்டிருக்கின்றது. ஆகையால் வாயினின்றும் ஆச்சரியகரங்களான சொற்களும் வெளிவருகின்றன. (நான் சுவாமியைத் துதிக்கப் புகுந்தது அவரின் அருளினாலேயேயன்றி எனது வல்லமையினாலன்று என்பது கருத்து).

---

(1)	க (k),	ச (ch),	ட (t),	த (t),	ப (p)
(2)	க (kh),	ச (chh),	ட (th),	த (th),	ப (ph)
(3)	க் (g),	ச (j),	ட (d),	த் (d),	ப (b)
(4)	க (gh),	ச (jh),	ட (dh),	த (dh),	ப (bh)

ஓம் ஸ்கந்தாய நம :

கந்தர் திருவிளையாடல்.

தோற்றுவாய்.

அறிவைத்தருகின்ற நூலுக்கு வித்தை யென்று பேர். வித் அறிவு ; அவ்வித்தை பதினான்கென்பார் ஆன்றோர்.

" வித்யாஸ்யே தாச்சதுர்த்தச "

—மஹாபாரதம்.

அவ்வித்தை பதினான்காவன :—இருக்கு, யஜுர், சாமம், அதர் வணம் ஆகிய வேதங்கள நான்கு ; சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தஸ், ஜோதிடம் என்னும் அங்கங்கள் ஆறு ; புராணம், நியாயம், மீமாஞ்சை, ஸ்மிருதி (தருமசாத்திரம்) என்பவை நான்கு ஆக வித்தை பதினான்கு. இவற்றோடு ஆயுள் வேதம், வில்வேதம், காந்தர்வவேதம், அருத்தவேதம் என்னும் உபவேதம் நான்கனையுங் கூட்டி வித்தை பதினெட்டென சைவபுராணத்து வாயுசங்கிதை தெரிவிக்கிறது.

" அஷ்டா தசாநாம் வித்யாநாம் ".

இவ்விருதிற நூல்களும் புராணத்தைப் பிரமாண வித்தையில் வைத்துக் கூறுவவாயின. இப்புராணம் பதினெட்டு வகைத்தாம் அவை :—சைவம், பௌஷியம், ஸ்காந்தம், மார்க்கண்டேயம், இலிங் கம், வாராகம், வாமனம், மச்சம், கூர்மம், பிரமாண்டம், காருடம், நாரதீயம், வைணவம், பாகவதம், பிரமம், பதுமம், ஆக்கினேயம், பிரமகைவர்த்தம் என்பன. இவற்றுள் முறையே சிவபுராணம் 10, விஷ்ணுபுராணம் 4, பிரமபுராணம் 2, அக்கினிபுராணம் 1, சூரிய புராணம் 1, ஆக 18. புராணம் என்றால் பழைமை என்று பொருள். பதினெட்டுப் புராணங்களின் கிரந்த எண் 4 இலட்சம். (32 எழுத் துக்களைக் கொண்டது ஒரு கிரந்தம்) அவற்றுள் 17, புராணங்களின் எண் 3, இலட்சம். கந்தபுராணம் ஒரு இலட்சம் கிரந்த முடையது ஏனையபுராணங்களை எண்ணால் இளமை படுத்தும் சிரேட்டமுடையது. இம்மகா புராணமாகிய காந்தபுராணம்.

இக்கந்தபுராணம் வேதவேதாந்தங்களின் சாரத்தையும் தன்னகத்தே கொண்டதும், புராணங்களின நாயகமும், விசாலமுடையதுமாகும். இத்தகைய மகாபுராணமானது சனற்குமாரசங்கிதை, சூதசங்கிதை, பிரமசங்கிதை, விட்டுணு சங்கிதை, சங்கர சங்கிதை, சூரசங்கிதை என ஆறு சங்கிதைகளை யுடையது. இவற்றுள் சங்கர சங்கிதையென்பது முற்றும் வேத சம்மதமாயுளளது என்பதை சம்பவகாண்டம் தெரிவிக்குமாறு காண்க.

" தத்ரயா ஸம்ஹிதாப் ரோக்தா
சாங்கரீ வேத ஸம்மதா ''.

இத்தகைய சங்கரசங்கிதை பன்னிரண்டு கண்டங்களை யுடையது. அவற்றுள் முற்பட்டது சிவாகசிய கண்டம். அச்சிவாகசிய கண்டம் சம்பவகாணடம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம், உபதேசகாண்டம என்னும் ஏழுகாண்டங்களை யுடையதாம் இவற்றுள் முதலாறு காண்டங்களையும் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் செந்தமிழில் பாரகாவியமாக இயற்றினர். ஏழாவதாகிய உபதேச காண்டத்தை குகனேரியப்ப நாவலர் இனிது தமிழில் இயற்றினர்.

எண்ணுதற்கரிய புண்ணிய புராணமாகிய இக்கந்தபுராணம் இவ்வகையாகப் பல பிரிவுகளாக ஒப்பற்று விளங்குவதாம். எந்த வரலாற்றினையும் கந்தபுராணத்திற் காணலாம் என்ற முதுமொழியே அப்புராணத்தின் பெருமையை விளக்கப் போதிய சான்றாம். இத்தகைய அரிய பெரிய புராணத்தின் சங்கர சங்கிதை கந்தப்பெருமானுடைய திருவிளையாடல்களை விரித்துரைக்கிறது.

கந்தவேளுடைய புனிதமாகிய சரித்திரத்தை அன்போடு பாராயணம் புரிவோர்க்கும், சிரவணம் புரிவோர்க்கும் இகபரசித்தி எளிதிலுண்டாகும்.

சீருணுத்வம் ருஷயஸ்ஸர்வே கததோமத் கதாம் சுபாம்
ஸ்கந்தஸ்ய கீர்த்தி மதுலாம் கலிகல்மஷ நாஸிநீம்.

(வரலாற்றோடுங் கூடிய கந்தன் புகழ்மையை முனிச்சிரேட்டர்காள்! கேண்மின்! இது கலியுகத்திலுண்டாம் பாவத்தைப் படிக்கக் கேட்டவிளவேயே பாற்றிட வல்லது)

—சம்பவகாண்டம்.

ஆக்யானநற் பஹுபிர்யுக்த மபீஷ்டபல ஸாதநம் !
ஆதரேண முநிச்ரேஷ்டாச் சீருணுத்வம் கதயாமிவ !!

(வேட்ட பலனை நல்கத்தக்க கந்தனது சரித்திரத்தை நுங்கட்கு கூறுவல்; பிரியத்தோடு கேண்மின்)

—சமபவகாண்டம்.

இத்தகைய பரமபவித்ரமான கந்தப்பெருமானுடைய இனிய திருவிளையாடலை சுருக்கமாக வரைகுதும். அன்பர்கள் படித்து இக பர நலன்களை எய்துவாராக.

சம்பவகாண்டம்

காப்பு.

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுரை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

பார்வதி ஜனனம்.

திருக்கைலாய மென்னுந் திருமலை ஆயிரங்கோடி சந்திரர்கள் ஒருங்கு சேர்ந்து உதயமானல் எவ்வண்ணம் ஒளி செய்யுமோ அவ் வண்ணம் ஒளி செய்துக்கொண்டு விளங்கும் சிவபெருமான் தன்னை யடுத்த அடியார்களது பாசத்தை நீக்கி தமது திருவருளைத்தருமாறு போல் அவ்வெள்ளியங்குன்றம் தன்னைச் சார்ந்தோருடைய ஒளியை மாற்றி தனது நல்லொளியை வீசிக்கொண்டிருக்கும். கொன்றை, வில்வம் முதலிய தருக்களின் சோலைகளால் அம்மலை இயற்கையழகுக் கிருப்பிடமானது முக்கண்ணும், நாற்புயமும், பொன் மேனி யு முடைய நந்தியெம்பெருமான் பொற்பிரம்பைக் காத்திலேந்தி காவல் புரிந்துகொண்டிருப்பர். இந்திரன் முதலிய இமயவர், ஈறில்லாத மாதவமுடைய இருடிகள், சிவனடியார்கள், சிவகணங்கள் முதலி யோர் எப்போதும் அம்மகா மலையில் வாழ்ந்துகொண்டிருப்பர். அரம்பையர்களின் ஆடலும், கந்தருவர்களின் பாடலும், வீணை முத லிய இனிய வாத்தியங்களும், தேவர்களின் வாழ்த்தும், எக்காலத்தும் அம்மலையில் ஒலித்துக்கொண்டிருக்கும்,

ஊழிகாலத்து மழியாத அவ்வெள்ளியங்கிரியின் மத்தியில் நவ மணிகளின் நல்லொளி வீசிக்கொண்டு பொன்னெடுங்கோயில் ஒன்று பொலிவுற்றிருந்தது. அத்திருக்கோயிலின நடுவில் வனப்புகளுக்

குறைவிடமாக விளங்கும் மணிமண்டபத்தில் நவமணியிழைத்த அரியணைமேல் அம்பிகையுடன் சிவபெருமான் எழுந்தருளியிருந்தனர். தும்புருநாரதர், கந்தருவர், செந்திருமுனிவர் முதலியோா இனிய கானம் புரிந்துகொண்டிருந்தனர்.

அத்தருவாயில் அம்பிகை மனத்தில் ஒன்றை நினைத்து துணுக்குற்று விரைந்தெழுந்து, சிவபெருமானைத் தொழுது, "கற்பனை கடந்த கண்ணுதலே! சிவ அபராதியாகிய தக்ஷனுடைய மகள என்னும் பொருள்படும் தாக்ஷாயணி என்ற பெயரை யான் பூண்டிருத்தல் தகுதியன்று. அவனால் வளர்த்த இவ்வுடலையும அவனுடைய மகளென்னும் பெயரையும் இனி தரித்திரேன்; அவை நீங்குமாறு திருவருள் புரிதல் வேண்டுமென" வேண்டினர். சிவபெருமான் "ஒப்பற்ற அன்புடைய ஒண்டொடி! உலகத்தில் ஆன்மாக்கள் உய்யும்வண்ணம் இங்ஙனம் நினைத்தனை; நினது எண்ணம் நன்மையுடைத்தே; மலையரசனாகிய இமவான் நின்னை மகளாகப்பெற்று எமக்குத் தருமாறு விழைந்து பெருந்தவம் புரிகின்றனன். அவன் விருப்பம் நிறைவேறுமாறு நீ அவனுக்கு மகளாகச் சென்று வளர்குதி. ஐந்தாவது ஆண்டில் நம்மை நோக்கி நற்றவம் புரிதி; அக்கால் கணங்களோடு நாம் வந்து நின்னை மணங்கொண்டு திருவருள் புரிவோம்; செல்லுதி" என்று அருளிச்செய்தனர். விடையவன்பால் விடைபெற்ற உமாதேவியார் வெள்ளி வெற்பைவிட்டு இமயமலையை எய்தினர்.

கீழ்த்திசைக்கடலும் மேற்றிசைக்கடலும் ஒன்றுகூடாவண்ணம் தடைசெய்ய நிற்பதுபோன்று விண்ணளாவிய இமயமலை எழில் செய்து விளங்கும். அம்மலையின்மேல் தேவாமிர்தமொத்த தெண்ணீருடைய பத்மை என்னும் தடாகமொன்று திகழும் அத்தடாகத்தில் இமவான் கௌரியம்மை தனக்கு மகளாகத்தோன்றவும், அவரை அரனார்க்கு நல்கவும் விழைந்து பெருந்தவமாற்றி நின்றனள்.

எல்லா வுலகங்களையுமீன்ற எம்பிராட்டி அத்தடாகத்தில் அழகிய தாமரை மலரின்மேல் கண்களைக்கவரும் கட்டழகுடைய இளங் குழந்தை வடிவத்துடன் வீற்றிருந்தனள். அத்தெய்வக்குழந்தையை இமவான் கண்டு அடியேனை ஆட்கொள்ளும்பொருட்டு அகிலாண்ட கோடி யீன்ற அன்னை குழந்தையாகவந்து அமர்ந்தனள் என்று ஆனந்தக்கண்ணீர் சொரிந்து, உரோமஞ் சிலிர்க்க பெருங்களிப்புற்று

"அடியனேன் தவம் பலித்தது" என்று ஆனந்தக்கூத்தாடி அம்பிகையைத் தொழுது குழந்தையைக் கரத்திலெடுத்து சென்னிமேற் றூங்கிக்கொண்டு, தனது பொன்மாளிகை புக்கு தனது தரும பத்தினியாகிய மேனையின் கரத்திலே மகவை நல்கினன்.

பருவதராஜனாற் கொடுக்கப்பெற்ற தெய்வக் குழவியை மேனை தொழுது வாங்கி, குழந்தை கிடைத்த வரலாற்றைக்கேட்டு ஈசனாது இன்னருளால் இம்மகவு கிடைத்தது என்று மனமிகமகிழ்ந்து மார் போடணைத்தனள கொங்கைகள் பால் சுரந்தன பரிபுரம், தண்டை, சங்குவளை, ரத்தினச்சுட்டி, மதாணி, பொற்றோடு, அங்கதம் முதலிய பொன்னாபரணங்களை குழந்தைக்குத்தரித்து பொனனாலாகிய தொட்டிலில் தாலாட்டி, உலகங்களையெல்லாம் ஈன்று வளர்த்த உலகமாதாவை மகளாகப் பெற்றுவளர்த்தனள். பருவதராஜனுக்கு மகளாக வந்ததனால் பார்வதி என்னுந் திருப்பெயரைப பெற்றனர்.

பார்வதியாருக்கு வயது ஐந்து ஆயிற்று அத்தருணத்தில் அம்பிகை ஆலமுண்ட அண்ணலில் ஆணையை நினைத்து இமவானைநோக்கி, "ஐய! மணிகண்டப் பெருமானை மணம் புரிந்துகொள்ளுமாறு அப்பெருமானைக் குறித்துத் தவம்புரிவேன் அதற்கு இம்மலையிலோர் பால் தவச்சாலை யொன்றை நியமித்தருவீர்" என்று கூறினார. அதனைக்கேட்ட மலையரையன் "அம்மா! தவம என்பது சாமானியமன்று; உடல் வருந்தித் திடஞானத்துடன் செய்தல்வேண்டும்; அதறகு இது பருவமன்று; உனக்கு வயது ஐந்தே நிறைந்துளது; நின் உடல் தவம் புரிதற்கு வலிபெறவில்லை; ஆதலால் தவம் புரியும் எண்ணத்தைத் தவிர்தி" என்றனன். அங்ஙனமே தாயுந் தடுத்தனள். உமாதேவி "எந்தாய்! எவ்வுயிரையுங் காக்கவல்ல ஈசன் ஒருவனுண்டு; அவனருளின்றி யாரும் தம்மைத் தாமே காத்துக்கொள்ள இயலாது; இப்போது யான் கூறுவதும் அவன் திருவருளே; தடை செய்யாது விடை தாரும" என, மன்னன் இசைந்து தவச்சாலை செய்து மகளை அதிவிருத்தி, அநேக கன்னியரைக் காவலாகச் செய்து வேண்டுவ செய்தான். பார்வதியார் தவச்சாலை சென்று கன்னியர் பலர்சூழ கண்ணுதற் பரமனை மன மொழி மெய்களால் வழிபாடு செய்து அருந்தவத்திருந்தனர். மலையரசனும் மேனையும், தினந்தோறும் மகளைப்போய்ப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

(தொடரும்)

ஓம் குஹாய நம :

கற்பு.

(369-ம பக்கத் தொடர்ச்சி)

சுகன்னி.

பெண்களுக்குக் கணவனே தெய்வம்; கணவனுடன் வசித்தலே சுவர்க்கலோகவாசம். நாயகன் வயோதிகனாக இருக்கினும் அவனையே நன்கு வழிபாடு செய்தல்வேண்டும் இத்தகைய அசைவற்ற கற்புடைய பதிவிரதையை உடையவனுக்கு அடையத்தகாத பொருள் மூவுலகிலுமில்லை. இதனை விளக்கும் சுகன்யோபாக்யானத்தை ஈண்டு வரைகுவம; பெண்மக்கள் படித்துப் பயன்பெறுவார்களாக

பிருகு முனிவருக்கு புலோமை என்னும் தருமபத்தினியிடம் சியவனர் என்னும் புதல்வர் தோன்றினர். அவர் தவத்தையே தனமாகக்கொண்டவர். பொறிகளையும் புலன்களையும் வென்றவர், அவர் ஒரு கானகத்தில் கடுந்தவம் புரிந்திருந்தனர். மிகுந்த ஒளியையுடைய அவர் வீராசனத்துடன் சித்திரதீபம்போல் அசைவற்ற மனத்துடன் ஒரேயிடத்தில் கம்பம்போல் நெடுங்காலமிருந்தனர். அதனால் அவரைக் கொடிகள் சூழ்ந்தன; புற்று மூடியது; புத்திமானான அவர் மண்முட்டுப்போல எல்லாப் பக்கங்களிலும் சூழப்பட்டவரானார். புற்றினால் சூழப்பெற்று பயங்கரமான தவத்தைப் புரிந்துகொண்டிருந்தனர்.

நெடுங்காலத்திற்குப்பின் சந்திரகுலத் திறைவனாகிய சர்யாதி விளையாடுவதற்காக பரிவாரங்களுடன் தனது மகள் சுகன்னியுடனும் அக்கானகத்திற்கு வந்தனன். நதிகளாலும், நறுமலர்ச் சோலைகளாலும், அழகிய சிறு குன்றுகளாலும் அவ்வனம் மிக்க இயற்கை வனப்புடன் இலங்கியது. சர்யாதிக்கு நாலாயிரம் பத்தினிகள் இருந்தனர். அழகிய புருவங்களுள்ள சுகன்னி ஆடையாபரணங்களால் அலங்கரித்து தோழிகளுடன் உலாவிக்கொண்டு சியவனர் தவம்புரிகின்ற புற்றை அடைந்தனள். தோழிகளால் சூழப்பட்ட அம்மாதரசி அங்கே மனத்தை மகிழ்விப்பதான பூமியைப் பார்த்துக்கொண்டும் மலர்களைப் பறித்துக்கொண்டும் விளையாடினாள். தோழிகளைப் பிரிந்து தனியாக

மலர்மிசைவாழும் திருமகளைப்போல மெல்ல உலாவிக்கொண்டிருந்த னள். அறிவிற் சிறந்த அருந்தவராகிய சியவனர் தனித்திருப்பவளும் ஒற்றையாடை யுடுத்தவளும அலங்கரிக்கப்பட்டவளும் ஆகிய அப் பெண்மணியை அசைந்து கொண்டிருக்கிற மின்னலைப்போலக் கண் டார். மிகுந்த ஒளியுடைய அவர் ஜனங்களில்லாத இடத்தில் அவளைக் கண்டுகளித்தனர். குரல் மெலிந்தவரும் தபோபலத்துடன் சேர்ந்தவரு மாகிய சியவனர் சுகன்னியை அழைத்தனர். அவளுக்கு இவருடைய சொல் கேட்கவில்லை பிறகு சுகன்னி புற்றில் சியவனருடைய கண்க ளைப்பார்த்து அறிவுமயக்கத்தால் வலிமைசெய்யப்பட்டவளாகி மகிழ்ச் சியால் 'இது என்ன?' என்று கூறி முள்ளினால் அவருடைய கண் களைக்குத்தினாள். உடனே சியவனர் சினமடைந்து சர்யாதி யினது சேனைகளின் மலஜலங்களைப் கட்டிவிட்டார். மலஜலங்கள் தடுக்கப்பட்டவுடன் சேனையானது மிக்கத் துன்புறுவதாயிற்று. அதனைக்கண்ட அரசன் தன் பரிசனங்களை நோக்கி, 'தவத் தில் எப்பொழுதும் நிலைபெற்றவரும், வயது முதிர்ந்தவரும், மிகுந்த கோபமுடையவருமாகிய சியவனருக்கு இப்போது இங்கே தெரிந்தோ தெரியாமலோ தீமை செய்ததுயார்? அதனை விரைவில் கூறுங்கள்; தாமதித்தல்கூடாது'' என்று வினவினன். அது கேட்ட அனைவரும் ''மறநெறிநின்ற மன்ன! நாங்கள்யாரும் சியவனருக்குத் தீமை புரிந்தோமில்லை. எல்லா உபாயங்களாலும் அதனை அறிந்து கொள்ளும்'' என்றனர். பின்னர் மன்னன் தானே நண்பர் கூட்டத்தை நயமாகவும் பயமாகவும் கேட்டான். மலஜலபந்தத்தால் துன்புற்று வருந்துகிற சைன்யத்தையும் அதுகண்டு கவலையுற்ற பிதாவையும் கண்டு சுகன்னி, சர்யாதியை நோக்கி, ''அப்பா! நான் இங்கு உலவிக்கொண்டிருந்தபோது புற்றுக்குள் ஒளி செய்கின்ற ஒரு பிராணியைக் கண்டேன். நான் அதனை மின்மினிப்பூச்சிபோன்ற தென்றெண்ணி அருகில்சென்று குத்திவிட்டேன்'' என்றனள். மன்னன் கேட்டு திடுக்கிட்டு விரைவாகப் புற்றை நோக்கிச் சென் றனன் அதில் சந்திர சூரியர் போல் ஒளியுள்ளவரான தவ முதியவரைக் கண்டான். அரசன் கைகூப்பிக்கொண்டு ''அருந்தவப் பெரியீர்! என்னுடைய சிறுமி அறியாமையால் உமக்குச்செய்த அபராதத்தை மன்னிக்க வேண்டும்'' என்று வேண்டினன்.

பிருகு புத்திரரான சியவனர் மன்னனை நோக்கி, ''அகங்காரத் தால் நிறைந்த இப்பெண்ணால் நான் அவமதிப்பினால் குத்தப்பட்டேன்.

கொற்றவ! இணையற்ற எழிலும் கம்பீரமும் உடையவளும் லோபத்தாலும் மோகத்தாலும் வசப்படுத்தப்பட்டவளுமான உன்னுடைய அந்தப்பெண்ணையே நான மணம்புரிந்தால் மன்னிப்பேன்; இதனை உண்மையாக உணாவாயாக" என்று கூறினர். முனிவருடைய மொழிகளைக்கேட்ட முடி மன்னன் ஆராயாமலே அருந்தவமுனிவருக்குத் தனது பெருந்தவப் புதல்வியைக் கொடுத்தான். முனிவர் கன்னிகையைப்பெற்று அருளபுரிந்தனா. அருளைப்பெற்ற அரசன் சேனைகளுடன நகாஞ்சென்றனன். கற்பிற் சிறந்தவளாகிய சுகன்னி வயது முதிர்ந்த மாதவரை மணாளனாக அடைந்து, அன்புடனும் தவத்துடனும் அடக்கத்துடனும் அவருக்குத் தினந்தொறும் ஏவல்புரிந்துவந்தாள். அரச செல்வத்தை அனுபவித்த அம்மாதரசி ஆரண்யத்தில் கிழவராகிய முனிவரை சிறிதும் அவமதியாது அவருடன் வசிப்பதையே இந்திரலோக வாழ்வாகவும், அவருக்குப் பணிவிடை புரிவதையே பெறத்தக்க பேறெனவும், அவருடைய வாக்கே வேதவசனமெனவும் எண்ணி மிகுந்த மகிழ்ச்சியுடன் வாழ்ந்திருந்தனள். அசூயை இல்லாதவளும் அழகிய முகமுள்ளவளுமான அவள் அக்கினிகளுக்கும் அதிதிகளுக்கும் விரைந்து பணிசெய்து சியவனரை ஆராதித்து வந்தாள்.

சிலகாலம் சென்றபின் அசுவினி தேவர்கள், நீராடிக்கொண்டு ஆடையால் மறைக்கப்படாதவளான அந்த சுகன்னியைக் கண்டார்கள். பார்த்தற்கு இனிய அங்கங்களுள்ளவளும் தேவராஜனுடைய புதல்வியைப் போன்றவளுமான அவளைப்பார்த்து அசுவினிதேவர்கள் எதிரில் ஓடிவந்து, "அழகிற் சிறந்தவளே! நீ யாருக்கு உரியவள்? இந்தக்காட்டில் என்னசெய்கிறாய் ' கல்யாணி! உன்னை அறிய விரும்புகிறோம், உண்மையைக்கூறுதி" என்றனர். சுகன்னி ஆடையைச் சுற்றிக்கொண்டு அந்தத் தேவச்சிரேஷ்டர்களை நோக்கி, "என்னை நீங்கள் சர்யாதியின்புதல்வியென்றும் சியவனருடைய மனைவியென்றும் தெரிந்து கொள்ளுங்கள்; என்பெயர் சுகன்னி. நான் எல்லா விதங்களாலும் எப்பொழுதும் கணவனையே அனுசரித்தவள்" என்று சொன்னாள். அசுவினிதேவர்கள் நகைத்து மீண்டும் அம்மடவாலைப் பார்த்து, "மாதாசே! நீ எப்படி பிதாவினால் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறாய்? இந்த வனத்தில் நீ பிரகாசிக்கின்ற மின்னலைப்போல் விளங்குகிறாய். பயந்தவளே! தேவர்களுள்ளும் உனக்கு நிகாராக இருப்பவளை நாங்கள் பார்கவில்லை. அழகிய ஆரணங்கே! ஆபரணங்

களில்லாதவளும் சிறந்த ஆடைதரியாதவளுமான நீ அலங்கரிக்கப் படாதவளாக இருந்தும் கானகத்தை அதிகமாகப் பிரகாசிக்கச் செய்கிறாய். கல்யாணி! எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டுச் சிறந்த ஆடையை உடுத்தால் நீ நன்றாகப் பிரகாசிப்பாய். இவ்வண்ணம் அழுக்கும் சேறுமுள்ளவளாயிருந்தால் பிரகாசிக்கமாட்டாய். இத்தகையளாயிருந்தும் யாது காரணம்பற்றி மூப்பினால் தளர்ந்தவரும் காமபோகங்களுக்கு விலக்கானவருமான பதியை அடைந்திருக்கிறாய்? குற்றமற்றவளே! இணையற்ற எழிலுடைய நீ இரட்சிப்பதிலும் மகிழ்ச்சியைத் தருவதிலும் திறமையில்லாத சியவனரை விட்டுவிடு. எங்கள் இருவருள் ஒருவரை வரிப்பாயாக. தேவகன்னிகையைப்போன்ற காந்தியுடையவளே! இந்தப் பதிக்காக உன் யௌவனத்தை வீணாக்காதே'' என்று மொழிந்தார்கள்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட சுகன்னி ஒரு சிறிதும் மனம் மாறினாளில்லை. கலங்காத சித்தத்தையுடைய அக்கற்பரசி அசுவனி தேவர்களைப்பார்த்து, "நான் பர்த்தாவாகிய சியவனரிடத்தில் பற்றுள்ளவள். என்னைப்பற்றி நீங்கள் சந்தேகிக்கவேண்டாம்'' என்றனள். அவ்விருவரும் மீளவும் அவளை நோக்கி, பெண்ணரசே! நாங்கள் தேவ வைத்தியர்கள; உன்னுடைய பதியை யௌவனமுள்ளவரும் அழகுபொருந்தியவருமாகச் செய்வோம். பிறகு அவரும் நாங்களுமாகிய எங்களுக்குள். ஒருவரைப் பதியாக வரிப்பாயாக. பெண்மணியே! இந்த உடன்பாட்டினால் பதியை ஆராய்ந்துகொள்'' என்று சொன்னார்கள் சுகன்னி அந்த வசனத்தை கேட்டு சியவனரிடம் சென்று நிகழ்ந்ததைக் கூறினாள். அது கேட்ட சியவனர் மனைவியை நோக்கி, 'செய்யலாம்' என்றனர். கணவனால் அனுமதிக்கப்பெற்ற அவள் அசுவினி தேவர்களை நோக்கி 'செய்யலாம்' என்றனள். அசுவினி தேவர்கள் மாதரசியே! உன்னுடைய பதி நீரில் மூழ்கக் கடவர்'' என்று கூறினார்கள். அதன்பின் சியவனர் ரூபத்தை விரும்பினவராகச் சீக்கிரம் நீரில் மூழ்கினர். ஆதித்தன் புதல்வர்களாகிய அசுவினி தேவர்களும் அப்பொழுது அந்தத் தடாகத்தில் மூழ்கினார்கள். பிறகு ஒரு முகூர்த்த காலத்திற்குப்பின் அம்மூவரும் திவ்ய ரூபத்தைத் தரித்தவர்களும், யௌவனமுள்ளவர்களும், ஒரே விதமானஉருவத்தைப் பூண்டவர்களும், மனத்திற்கு அன்பைப் பெருக்குகின்றவர்களுமாகி அத்தடாகத்தினின்றுங் கரையேறினார்கள். அம்மூவர்களும் ஒருவரைப்போல் ஒருவராக இருந்தார்கள்.

அடையாளங்கண்டுபிடிக்க முடியாத நிலையில் வித்யாசமின்றி இருந் தார்கள்.

மூவர்களும் ஒன்று சேர்ந்தவர்களாக, "கல்யாணி! மங்க ளத்தை உண்டுபண்ணுகிறவளே! சிறந்த நிறமுள்ளவளே! எங்களுள் இஷ்டமான ஒருவரைப் பதியாக வரிப்பாயாக. புகழுள்ளவளே! நீ அசுவினிதேவர்களையாவது சியவனரையாவது யாரிடத்தில் விருப்ப முள்ளவளாக இருக்கிறாயோ அவரை வரிப்பாயாக" என்று சொன் னார்கள். அந்தத் தேவி ஒத்த ரூபத்தைத் தரித்து நிற்கின்ற மூவர் களையும் பார்த்து கற்பின் பெருமையால் மனத்தாலும் புத்தியாலும் நிச்சயித்துத் தன் பர்த்தாவாகிய சியவனரையே வரித்தாள். சியவனர் மனைவியையும் விரும்பப்பட்ட வயதையும் அழகையும் மிக்க ஒளியை யும் அடைந்து கரையற்ற களிப்புற்று அசுவினிதேவர்களை நோக்கி, "வயது முதிர்ந்தவனாக இருந்த நான் உங்களால் நல்ல ரூபம் பொருந் தியவனாகவும் இளமையுடையவனாகவும் செய்யப்பட்டு கற்பரசியாகிய இவளையும் மனைவியாக அடைந்தேனாதலால், நான் அன்பினால் தேவர் கோமான் பார்த்துக்கொண்டிருக்கும்போதே யாகத்தில் சோமரசத் தைப் பருகுகிறவர்களாகச் செய்வேன். இது உண்மை" என்றனர். அவர்கள் கேட்டு மனமகிழ்ந்து வானோடு சேர்ந்தார்கள். கற்பின் மிக்க சுகன்னியும் சியவனரும் இனிது வாழ்ந்தார்கள். உத்தம மனைவி யால் அடைதற்கரிய நலனை சியவனர் பெற்றனர்.

(தொடரும்)

உபதேசம்.

தண்ணீரும், நீர்க்குமிழியும், வாஸ்தவத்தில் ஒன்றேயாகும். நீர்க்குமிழி நீரில் பிறந்து, நீரில் மிதந்து, நீரிலேயே மறைகின்றது. அதுபோல ஜீவாத்மாவும், பரமாத்மாவும், யதார்த்தமாக சுவரூபத்தில் ஒன்றேயாகும். பரஸ்பரம் காணப்படும் பேதங்களெல்லாம் அளவிலேயே ஒழிய இனத்தில் கிடையாது. ஜீவன் ஓர் அளவுக்குட்பட்ட சிறியவனும், பரமாத்மாவைப் பற்றி இருப்பவனுமாம். பரமாத்மாவோ எல்லையில்லா அகண்டரும், தன்னிகரில்லா சுதந்திரருமாக இருக்கிறார்.

இராமகிருஷ்ணர்.

ஓம் குஹாயநம :

பிரமசரியம்

மெய்யன்புடையீர் !

மனிதனுடைய உயிர்வாழ்க்கை நான்கு பிரிவுகளாக அமைந்திருக்கிறது. அவை :—பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாஸம் என்பன. அவற்றுள் பிரமசரியம் என்பது உபநயனத்திற்குமேல் விவாகம் வரை நியமந்தவருது இருக்கும் ஒரு சிறந்த நிலை. அந்த பிரமசரிய விரதத்தை விதிப்படி அனுஷ்டித்தல் வேண்டும், உலகில் பிரமசரிய நிலையை அநுஷ்டித்த பிறகே கிருகஸ்தாச்சிரமத்தையடையவேண்டும். எல்லோரும் கல்யாணத்திற்குமுன் இந்தப் பிரமசரிய நிலையில் இருக்கின்றனர். ஆனால் விதிப்படி இருக்கின்றனரா ? பிரமசரியம் என்ற நிலையை எவ்வாறு கழித்தல் வேண்டும் ? என்பது பற்றிச் சிறிது வரைகுதும்.

ஐந்தாவது ஆண்டில் சற்குருவையடுத்து அறிவைத் தருகின்ற அறநூல்களை ஓதுதல் வேண்டும். அங்ஙனம் வேதம் ஆகமம் வேதாங்கம் தருமநூல் முதலியவைகளைக் கற்குங்கால் குருபக்தி விநயம் என்ற இரு குணங்களை மூக்கியமாக மேற்கொள்ளல்வேண்டும். ஆசாரியனைக் கடவுளாக நினைத்தல்வேண்டும்; "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்ற அறமொழியை நோக்குக. கற்கத்தொடங்குமுன் ஒவ்வொரு நாளும் குருநாதனை வணங்கி வடக்கேனும் கிழக்கேனும் திரும்பி கைகளைக் கட்டிக்கொண்டு ஓதல்வேண்டும். அமாவாசை, பௌர்ணமி, பிரதமை, சதுர்த்தசி, அட்டமி முதலிய விலக்கப்பட்ட நாள்களில் வேதமோதுதல் கூடாது. வேதம் ஆகமம் என்ற இரு நூல்களைத் தவிர ஏனைய புராணம் வேதாங்கம் முதலிய நூல்களை அமாவாசை பௌர்ணமி என்ற நாள்களைத்தவிர மற்ற நாள்களில் ஓதலாம். பாராயண நூல்களை எந்நாளும் ஓதலாம். பழைய காலத்தில் மாணவர்கள் குருவினது இருக்கையிலேயே வசித்து வந்தார்கள். அதற்கு 'குருகுல வாசம்' என்று பெயர். அப்படி

குருவின் இருக்கையிலிருக்குங்கால் பிட்சையெடுத்து குருவின் அநுமதிபெற்று உண்ணவேண்டும். இது நெடுங்காலத்திற்கு முன் அநுசரித்த தருமம். தற்காலம் வீட்டிலிருந்து கலை கற்கிறார்கள். முக்கியமான அடியில் வரும் விதிகளைத் தவறாமல் அநுஷ்டித்தல் வேண்டும். குருநாதன் கட்டளையிடுகின்ற ஏவலை சென்னிமேற்றாங்கி சிரத்தையுடன் செய்யவேண்டும். குருவினது கட்டளையைச் செய்துவிட்டு குருவினருகிற்சென்று வணங்கி 'செய்துவிட்டேன்' என்று சொல்லி பக்கத்தில் நிற்கவேண்டும். எல்லாக் காரியங்களிலும சமர்த்தனுயிருந்து 'செய்வன திருந்தச் செய்' என்றபடி ஒழுங்காகத் தொழில்களைச் செய்யவேணடும. முன்னேற்ற மடையவேண்டுமென்ற விருப்பமுடைய ஒவ்வொரு பிரமசாரியும் குருவை அலட்சியம் செய்யக்கூடாது. குருவின் வலப்பக்கமாக இருக்கவேண்டும்; குரு அழைத்தால் உடனே போகவேண்டும். நீராடி பரிசுத்தமான ஆடையை அணிந்து கடவுளை வழிபட்டு படிக்கவேண்டும். குருநாதன் ஒரு சமயம் கோபித்தாலும் அடித்தாலும் அன்பாகவும் அடக்கமாகவும் இருந்து கற்றல்வேண்டும். குருவின சமீபத்தில் இருக்கும்போது கொட்டாவி விடுதலும் தும்முதலும் கால்நீட்டியிருத்தலும் கால்மேல் கால்வைத்து அமருதலுங்கூடாது. சமயம்பார்த்து தனக்கு ஏற்பட்ட சந்தேகங்களைக் கேட்டுத் தெளிதல்வேணடும். குருநாதன் நிற்கும்போது தானும் நிற்கவேண்டும்; அவர் உட்காராமலிருக்கும்போது தான் உட்காரக்கூடாது. அவர் நித்திரை புரியாதிருக்கும்போது தான் நித்திரை செய்யப்படாது. *நிமிர்ந்த கரங்களால் அவருடைய பாதங்களை மெல்லப்பிடிக்கவேண்டும். இடப்பாதத்தை இடக்கரத்தாலும் வலப்பாதத்தை வலக்கரத்தாலும் பிடித்தல்வேண்டும். "குருநாதா! இந்தக் காரியத்தைச் செய்துவிட்டேன்; இதைச் செய்யப் போகிறேன்; இன்னும் நீங்கள் எதை ஏவுகின்றீர்களோ அதையுஞ் செய்வேன்; என்று எல்லாவற்றையுந் தெரிவித்து குருவின் அநுமதி பெற்றுக்கொண்டு விதிப்படி செய்யவேண்டும். செய்துவிட்டு மீளவும் அவற்றையெல்லாம் குருவினிடம் சொல்லவேண்டும்.

பிரமசாரி பழைய சோற்றையும் தேனையும் உண்ணப்படாது. சூரியனை வீணே பார்க்கப்படாது; உறவினரிடமிருந்து உண்ணுதலும்

* உள்ளங்கை.

அறிவீனர் கூட்டத்திற் சேர்தலும் கூடாது; சந்தனம், புஷ்பம், தாம்பூலம் ஆகியவற்றைத் தரிக்கப்படாது; எந்த வுயிரையும் இம்சிக்கப்படாது.

" நென்னல் லமைத்த செழுஞ் சோறு பைந்தேனு நீப்பர்
கொன்னே யிரவி தனை நோக்குதல் கொள்கை யன்றே "

" காழ் கொண்ட சந்தங் கமழ்தா ரடைக்காயோ டாகா
வாழ்கின்ற ஆவி யெவையேனும் வதைத்த லாகா "

—காசிகாண்டம்.

பெண்கள் சமீபத்தில் இருத்தலும், அவர்களோடு கலந்து பேசுதலும், கீதங்கேட்டலும், கூத்துப்பார்த்தலும் ஆகாவாம். காமவுணர்ச்சியை வளர்க்கின்ற கதைகளைப் (நாவல்ஸ்) படிக்கவே கூடாது. ஆடும் படங்களைப் (சினிமா) பார்க்கப்படாது; சீட்டு முதலிய தீய ஆட்டங்களை ஆடப்படாது; கிடைத்தற் கரிய நேரத்தை கமரில் காமதேனுவின்பாலைக் கவிழ்த்ததுபோல் வறிதே கழிக்கப்படாது. பெண்களைக் குறிப்புப் பார்வையாக நோக்குதல் தகாது; பயனற்ற வார்த்தைகளைப் பேசப்படாது.

அறிவு என்கின்ற பயிரை நூல்கள் என்ற நீர்விட்டு பயிர்புரிந்த நல்லாசிரியனை நிந்திக்கப்படாது; ஒரு எழுத்தையோ ? ஒரு பொருளையோ ? கற்றுக்கொடுத்த ஆசாரியனுடைய மனம் வருந்துமாறு நிந்தித்தோர், ஊருக்கு மத்தியில் நாயாய்ப்பிறந்து ஒரு யுகம் வரை புழுவாகப் பிறந்து துன்புறுவர்.

ஓரெழுத் தொரு பொரு ளுணரக் கூறிய
சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோர்
ஊரிடைச் சுணங்கனாய்ப் பிறந்தங் கோருகம்
பாரிடைக் கிருமியாய்ப் படிவர் மண்ணிலே.

—திருமந்திரம்.

வேதங்களையும், வேதங்களின் நுண்மாண் பொருள்களையும் நன்றாக எடுத்துப் போதித்தவர் ஆசாரியரென்றும், பொன் பெற்றுச் சொல்லிவைப்பவர் உபாத்தியரென்றும், எல்லா வினைகளும் ஒழியும்படி உபதேசித்தருளுகின்றவர் குருவென்றும் பெயர் பெறுவர்.

நல்வேதப் பொருள் யாவு நவின்று ளோர்கள்
தொல்லா சிரியர் பொருள்கொண் டவை சொல்லுகிற்போர்

ஒல்லாத தீங்குத் தபநூறு மூபாத்தி யாயர்
எல்லா வினையு முடிப்போர் குருவென்ப ரன்றே,

—காசிகாண்டம்.

பிதா மாதா குரு இம்மூவரும் வழிபடத்தக்க தெய்வங்களாம்; பிதாவைக் காட்டிலும் மாதா உயர்வாகும்; தெளிவு உண்டாக்கிய ஆசாரியரை நிந்திப்போருடன் கூடப்படாது. தாய் தந்தை குரு ஆகிய குரவர் மூவரையும் புறங்கூறுவோர், கூர்மையான முட்கள் நிறைந்ததும் இருள மிக்கதுமாகிய நரகத்தில் அநேக காலமிருந்து வருந்துவர்.

அருண் மேவுந் தந்தைதன்னி லன்னை யதிகமாதம்
தெருள் சேர் குரவற் பழிப் போரிடை சேர்தலாகா
மருளோடு மன்னோர் புறங்கூறுநர் வைமுள் ளேற்ற
இருண் மாநிரயந் தனிற் பற்பகலெய்து வாரே.

—காசிகாண்டம்.

தாய், சகோதரி முதலியவர்களானாலும் அவர்களுடன் பிரமசாரி தனித்த இடத்தில் வசிக்கப்படாது அரசன், குரு, தமையன், மாமன் இவர்களது மனைவியரும், தன்னைப் பெற்றவளும் ஆகிய ஐவரும் தாய் மாரவர். சூரியன் உதிப்பதற்குமுன் எழுந்திருந்து நீராடி தெய்வத்தை வணங்கி நூல்களைக் கற்றல்வேண்டும்; சூரியன் உதிக்குமளவும் துயில் நீங்கி யெழாத பிரமசாரி அன்று முழுதும் புசியாமல் விரதமிருக்கக்கடவன்.

இத்தகை பிரமசரியம், பௌதிக பிரமசரியம், நைட்டிக பிரமசரியம் என இருவகைப்படும். இளமை தொடங்கி கல்யாணகாலம் வரை மேற்கூறிய ஒழுக்கத்தினின்று வழுவாதிருந்து விரதங்காப்பது பௌதிக பிரமசரியம்; மரணமந்தம்வரை விரதம் நியமித்துத் துறவியாயிருப்பது நைட்டிக பிரமசரியம்,

பௌதிக பிரமசரியத்தை அனுஷ்டிப்பவன், ஆசாரியனிடத்தில் ஓதற்பாலனவாகிய வேதமுதலிய அறிவு நூல்களை ஓதியுணர்ந்து, அவருக்கு வேண்டிய தக்ஷிணைகளைத்தந்து அவரனுமதிபெற்று, தனது ஆயுளில் நாலிலொரு பாகத்தை பிரமசரிய விரதத்திற்கழித்து (அதாவது இருபத்தைந்து ஆண்டுகளுக்குமேல்) விதிப்படி சமாவர்த்தன

மென்னும் விரதமுடிவைச்செய்து, நற்குடிப் பிறந்த நங்கையை விதிப்படி மணஞ்செய்துக்கொள்ளவேண்டும்.

நைட்டிக பிரமசரியத்தை அனுஷ்டிப்பவன், பெண்களுடைய பெயரையுஞ் சொல்லாமல், அவர்களுடைய வடிவத்தையும் நினையாமல் புலன்களை அடக்கினவனாய் ஆசையைவென்று,'ஈசுரபக்தியுடன் மரண பரியந்தம் நெறிதவறாது இருத்தல்வேண்டும் ஒரு சமயம் இந்த நைட்டிக பிரமசாரி போகத்தின்கண் விருப்பமேற்பட்டால், ஆசாரியனிடஞ் சென்று உண்மையை யுரைத்து, ஆகமத்திற்கூறிய விதிப்படியே அவர் சந்நிதியில் நைட்டிக பிரமசரிய விரதத்தை இறக்கி நீராடி, அவரிடத்தில் வெள்ளை வஸ்திரம் இரண்டுபெற்று, பிராயச்சித்தஞ் செய்து முடித்து, அவரனுமதி பெற்றுக்கொண்டு விவாகஞ் செய்துகொள்ளல் வேண்டும்.

இவ்வாறு செய்யில் குற்றமில்லை, இப்படி விரதத்தை இறக்காது நைட்டிக பிரமசாரியாகவே இருந்துகொண்டு பெண்களுடன் சேருவானாயின், தன் உடலில் வளர்ந்த உரோமம் எத்தனை உண்டோ அத்தனை வருடம் மிகக் கொடிய ரௌரவமுதலிய நரகங்களிற் கிடந்துழலுவன். சுகசன்னி, நீரிழிவு, க்ஷயம், குஷ்டம் முதலிய நோய்களால் வருந்துவன. இவனுக்குக் கழுவாய் (பிராயச்சித்தம்) எந்த நூல்களிலும் இல்லை.

யட்சப்பிரச்னை.

வினா :—பிராமணர்களுககு தேவதன்மை எது ?

விடை :—இவர்களுககு வேதாததியயனமானது தேவதன்மை.

வினா :—ஸாதுககளுக்கிருப்பதுபோல, அவர்களுக்கு தர்மம் எது ?

விடை :—ஸாதுககளுக்குபோல இவர்களுக்குத தவமானது தர்மம்.

வினா :—அவர்களுக்கு மனுஷ்யததன்மை எது ?

விடை :—மரணம் இவர்களுககுமனுஷ்யத்தன்மை.

வினா :—அஸத்துகளுக்குபோல அவர்களுக்கு அதர்மம் எது ?

விடை :—அஸததுகளுககுபோல, இவர்களுககு பரநிந்தை,

ஓம் குஹாய நம :

ஸ்ரீ பஞ்சாக்ஷரம்.

"வேணுகோபால்"

சகோதர சகோதரிகாள் !

பஞ்சாக்ஷரம் என்பது ஐந்தெழுத்தாலாகிய திருமந்திரம். மந்திரம் என்றால் :—மந் நினைப்பவன் ; திரம்-இரக்ஷித்தல், காத்தல் ; அதாவது நினைப்பவனை இரட்சிப்பது என்று பொருள்.

யாவனொருவன் யாதொரு மந்திரத்தை முறையாக நினைப்பானாயின், அம்மந்திரம் அவனைத் துன்பத்தினின்றுங் காப்பாற்றி நன்மை யடையுமாறு அனுக்கிரகம்பண்ணா நிற்கும்.

"மகாரம் மநநஞ்சை வத்ரகாரம் த்ராணமுச்யதே
மநநத்ராணமித்யா ஞானமந்ரமித்ய பிதீயதே"

என்பது பிரமாணம்.

மேல்காட்டிய பஞ்சாக்ஷர மென்பது நமசிவாய என்னும் ஐந்தெழுத்துக்களாகும். இதனை உச்சரிக்குங்கால் 'சிவாய நம' என்றமையும் இதற்குச் சூக்கும பஞ்சாக்ஷரம் என்றும் பெயர். இதன் பொருள். சி-சிவம், வ-அருள், ய-ஆன்மா, ந-திரோதம், ம-மலம். "சிவன் அருள் ஆவி திரோதம் மலம் ஐந்தும் அவனெழுத் தஞ்சினடைவாம்," என்பதறிக.

அவற்றில் முன் இரண்டெழுத்துக்களும் பதியும், பின் இரண்டெழுத்துக்களும் பாசமும், நடு எழுத்தொன்றும் பசுவுமாகும். பதிக்கும் பாசத்துக்கும் இடைப்பட்டதாய் பாசத்தோடு சேர்ந்து பாசமாயும், பதியோடு சேர்ந்து பதியாயும; பாசமும் பதியும் அல்லாமல் தயங்கும் தன்மையை யுடையது பசு என்னுமுண்மை இதனால் நிலக்கும். பதியோடு கூடிய சம்பந்தத்தை ஞான நடனம் எனவும், பசுவோடு கூடிய சம்பந்தத்தை ஊன நடனம் எனவும் பெரியோர் கூறுவர். ஊன நடனமொழிந்து ஞானநடனம் தானே ஆதரிக்கற்பாலதென வேதாகமங்கள் முழங்கும். ஆதலால் நகார மகாரங்க

ளாகிய மலங்களைப் பின்றள்ளி யகாரமாகிய ஆன்மா வகாரமாகிய அருள்கூட்டச் சிகாரமாகிய சிவத்தில் அதீதப்படும்.

இதற்குப் பிரமாணம் : விருத்தாசல புராணம்.

"மகா வக்கரம் வல்லினந்துறந்திடை யினத்தில்
இகலறுத்தின மாக்கியே நகாரமதீறய்
வகாரவக்காத் தடங்கிட வொடுக்கமற்றவைபோற்
றுகளிலாவினஞ் சேர்ந்துறந் துறவர் பானின்றன்."

(பொருள்) மகார அக்ஷரமாகிய திரோதாயியை வல்லினமாகிய சிகாரவக்ஷரத்தை விடுத்து இடையினமாகிய நகார அக்ஷரமாகிய மலத்தை வகார அக்ஷரமாகிய அருளிலொடுக்கி, அவைகளை ஒடுக்கினதுபோல், குற்றமற்ற இனங்களென்னும் யகார அக்ஷரமாகிய ஆன்மாவை வகார அக்ஷரமாகிய அருளிலொடுக்கி அவ்வருளும் சிகாரவக்ஷரமாகிய சிவமும் பேதமற்று அபேதமான அத்து விதானந்த நிலையில் விளங்குகின்ற மூர்த்திகளான பெரியோர்களிடத்தில் அனுசரித்திருந்தான் சுவேதராசன் இதனைப்பிரகாராந்தமாகவும் காட்டி விவகரிப்பாம், எங்ஙனமெனின் :

நம=சீவான்மா, சிவ=பரமான்மா, ஆய=ஐக்கியம். (சிவ) பரமான்வாகிய பதிக்கும், (நம) சீவான்மாவாகிய பசுவுக்கும், (ஆய) அருட்பாசத்தி வாயிலாக ஐக்கியமுண்டாமென்பது.

இந்த பஞ்சாக்ஷரம் பிரணவத்தின் பொருளாயிருப்பதாலும் அதைப்போன்ற பிரநக் மந்திரமாதலாலும், பரம பாவநகாமான மோக்ஷமந்திரமாகும். ஐந்தெழுத்துங்கூடிய இம் மகாமந்திரத்தின் முதலில் பிரணவமில்லை.

"வித்தியா ஸ்ருதிஸ் ருத்ரைகாதசி நீஸ்ருதௌ
தத்ர பஞ்சாக்ஷரீதஸ்யாம் சிவ இத்யக்ஷர த்ரயம்"

என்பதினால் வித்தைகளெல்லாவற்றுள்ளும் சுருதியே உத்கிருஷ்டமானதென்றும், அதனுள்ளும்; உருத்திரைகாதசினியே உத்கிருஷ்டமானதென்றும், அதனுள்ளும் ஸ்ரீ பஞ்சாக்ஷரமே உத்கிருஷ்டமானதென்றும், அதனுள்ளும் சிவ என்னும் த்வயாக்ஷரங்களே உத்கிருஷ்டமானவையென்றும் தெரியவருகிறது. பிரணவம் வேறுதுணை வேண்டாது உச்சரிக்கப்படுவதேபோல் ஸ்ரீ பஞ்சாக்ஷரமும் வேறொன்றின் ஆஸ்ரயமில்லாமல் ஜபிக்கப்படுவதால் இரண்டும் தம்மில் வேறுபடாத ஒரே மந்திரமாகும். இதன் மகிமையோவெனின்:

" ஐந்து பூதமைம் பொறிகளோ டைம்புல னமர்ந்த
வைந் தேனுங் கருமேந்திய மைவர் காரணரா
மைந் தேனுந் தொழி லைம்பெரும் பிரமங்க ளனைத்து
மைந் தெழுத்தினி லுணர்த்துவ மறிவறிந் தவரோ"

" அஞ்செழுத் தாலைந்து பூதம் படைத்தனன்
அஞ்செழுத் தாற்பல யோனி படைத்தனன்
அஞ்செழுத் தாகிய வக்கர சக்கரம்
அஞ்செழுத் துள்ளே யமர்ந் திருந்தானே "

அதாவது பஞ்சாக்ஷரமாவது, நகார மகார சிகார வகார யகாரங் களாகிய ஐந்தெழுத்துக்களும் முறையே, பஞ்ச பூதங்களையும், பஞ்ச ஞானேந்திரியங்களையும், பஞ்ச கன்மேந்திரியங்களையும், பஞ்ச தன்மாத்திரைகளையும், பஞ்ச கலைகளையும், பஞ்ச சதாக்கியங்களையும், பஞ்ச சக்திகளையும், பஞ்சப் பிரமஙகளையும், பஞ்ச கர்த்தாக்களையும், பஞ்ச கிருத்தியங்களையும், பஞ்ச வாணங்களையும், பஞ்ச பட்சிகளையும், தமதுள் அந்தர்ப்பாவமாய்க் குறிப்பித்து விளக்கிக்கொண்டு சத்தார்த் தப் பிரபஞ்சங்களுக்கெல்லாம் பிரேரக நிலையாதாரமாயிருக்கிறது.

இம்மட்டோ ?

' சிவ ' என்னும் ஆணெழுத்தும் ' நம ' என்னும் பெண்ணெழுத் தும், ' ய ' என்னும் அலியெழுத்தும் சேர்ந்து பதி, பசு, பாசத்திலடங் கும். இது உச்சரிக்கப்படுகிற முறைமையினாலே ஸ்தூல பஞ்சாக்ஷரம், சூக்ஷ்ம பஞ்சாக்ஷரம், காரண பஞ்சாக்ஷரம், மகா காரண பஞ்சா க்ஷரம், அதி சூக்கும பஞ்சாக்ஷரம் அல்லது மநாமநு என ஐவகைப்படும். போகத்தைக்கொடுக்கக்கூடிய ஸ்தூல பஞ்சாக்ஷரம் " நமசிவாய " என்றும், மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடிய சூக்ஷ்ம பஞ்சாக்ஷரம் " சிவாயநம " என்றும் சொல்லப்படும்.

சூக்கும பஞ்சாக்ஷரத்திலுள்ள சிகாரம் சிவம், வகாரம் அருள், மகாரம் ஆன்மா, நகாரம் திரோதை, மகார மலம். ஆதலின், இந்த முறைமையை யுணர்ந்து ஊன நடனமாகிய நகார மகாரத்திலே சென்று ஜனன மரணப்பட்டுப்போகாமல், ஞான நடனமாகிய சிகார வகாரத்தைப் பொருந்திச் சிகார முதலாக உச்சரித்து, அப்படி உச்சரிக்கிற முறைமையையும் விட்டு, வகாரமாகிய ஞானம் தானாய் நிற்கவே, சிகாரமாகிய ஞேயத்திலே அழுத்துவிக்கும். அது

எப்படியெனில், சத்தியாகிய வகாரம் இடமாகச் சிவமாகிய சிகாரத்தின் இடையிலழுந்தலே அத்தன்மை யுண்டாக்கும். இந்த அனுபவ ரகசியத்தையும், பஞ்சாக்ஷரம் ஏகாக்ஷரமா மாறி வகாரத்தில் நகாரமும், யகாரத்தில் மகாரமும், சிகாரத்தில் வகாரமும், அதில் யகாரமும் ஒடுங்கும் முறைமையினையும், காரணபஞ்சாக்ஷரம், மகா காரணபஞ்சாக்ஷரம், மகாமநு, இந்தமூன்றையுல் குருபரன் திருத்தாளைச் சேர்ந்து வழிபட்டுத்தெரிந்துகொள்ளலாம். இதுவே பிரம்மாநுபவம் என்னும் சுவாநுபவமாம். முடிவாக ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தில் ஒருவன் உணர்ந்து கொள்ளவேண்டியது யாதனில் துக்கநிவர்த்தியும் சுகப்பேறுமேயாம். "பாசங்கழன்றால் பசுவுக்கிடம் பதியாம்" என்றும் அனுபவாளர் உரையே சான்றாம். ஆதலாலே

"மெய்த்த வோண்சிவ தத்துவ மதனினுமேலாந்
தத்துவாந்தா மின்மை போன்மறைகளின் றலையாய்
வைத்த வைந்தெழுத் தாகிய மந்திரமதனில்
உத்தரம்பெறு மந்திரமிலையென வுணர்வாய்"

இதனால் மூலமந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷரத்துக்கு மேற்பட்ட மந்திரங்கள் இல்லையென விளங்குகிறது.

"நமச்சிவாயவே ஞானமுங் கல்வியு
நமச்சிவாயவே நானறிவிச்சையு
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறிகாட்டுமே"

பிழையுளதேல் ஆன்றோர் பொறுக்க.

உ

ஓம் :

" திருப்புகழமிர்தம் " வளர்க !	" திருப்புகழமிர்தம் " சிறப்புரை.	" ஆனந்தாமிர்தம் " தருக ! !

"தி	ருப்புகழமிர்தம் " மிகமிகச் சிறந்த மாசிகை !		"தி
ரு	ப்புகழமிர்தம் " நம்பார்வைக்கு அரிய சஞ்சிகை !	" தி	ரு
ப்	புகழமிர்தம் " அறிவைப் பெருக்கும் பத்திரிகை !	" திரு	ப்
பு	கழமிர்தம் " உலகில் ஆராய்ச்சிக்கரிய வெளியீடு !	" திருப்	பு
க	ழமிர்தம் " காண்போர் கருத்திற்கிசைந்த மதிஅமிர்தம் !	" திருப்பு	க
ழ	மிர்தம் " அதிமிக நற்றமிழ் அணிகலன் !	" திருப்புக	ழ
மி	ர்தம் " நல்லரு மருந்தாகிய கற்பகம் !	" திருப்புகழ	மி
ர்	தம் " படிப்போர்க் கினிமை நல்குதேன் !	" திருப்புகழமி	ர்
த	ம் " ஆனந்தானுபவப் பொக்கிஷம் !	" திருப்புகழமிர்	த
ம்	பூசனை செயத்தகு நல்லமிர்த மாதப் பத்திரிகை !	" திருப்புகழமிர்த	ம்

க. அ. க. தமிழறிஞர் } *	வாழ்க ! வாழ்க !! சிறப்புடன் வாழ்க !!!	* { காயல்பட்டணம், 21—3—37.

உ

ஆதிசங்கரர்

வினா விடை மணிகள்.

கே:—எந்த ஆயுதம் எல்லோருடைய கையிலுமுள்ளது ?

ப :— யுக்தி (நியாயபூர்வமாக நிரூபணம் செய்யக்கூடிய சக்தி.)

கே :—எல்லோருக்கும் தாயார் யார் ?

ப :— பசு. (தன் குழந்தைக்குப் பால்கொடுத்துவிட்டு ஊருக்கும் பால்கொடுக்கும் பசு. அதை நாம் ரக்ஷிக்கவேண்டும்).

கே :—எது சேனை ?

ப :— தைரியம்.

கே :—எது எமன் ?

ப :— கவனமில்லாதிருந்துவிடல்.